Centre for External Degrees and Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka

## கருத்தரங்கு மற்றும் பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்
## கலைமாணி, மற்றும் வணிகமாணி வெளிவாரிப் பட்டப்படிப்பு கற்கை நெறிகள் (புதிய பாடத்திட்டம்)

(2014 / 2015 ஆம் கல்வியாண்டில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்குப் பதிவு செய்து முதலாம் வருட முதலாம் பருவத்தை பூர்த்தி செய்யாத மாணவர்கள் அனைவரும் விண்ணப்பிக்க முடியும்)

---

### (A) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் பரீட்சையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

   (உ-ம்:
   Year 1, Semester I Examination in Bachelor of Arts (BA)
   Year 1, Semester I Examination in Bachelor of Commerce (BCom)

2. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிவாரி அபேட்சகருக்கான மாணவ பதிவுப்புத்தகத்தில் காணப்படும் தங்களது பதிவு இலக்கத்தை உரிய குறியீட்டு எழுத்துடன் சரியாகக் குறிப்பிடவும். (உ-ம்: SEU/ES/15/AT/0045)

   - முதலெழுத்துக்களுடன் பெயரை எழுதவும் (உ-ம்: M.S. Sifan)
   - முழுப் பெயரை முறையாக சொற்களைப் பிரித்து எழுதவும் (உ-ம்: Mohamed Saleem Sifan)

3. தங்களது விலாசத்தையும், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் இரண்டையும், மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிடவும்.

4. பாடத்தின் குறியீட்டையும் பாட அலகுகளையும் குறிப்பிடவும். விபரம் பின்வருமாறு:

   கலைமாணி பட்டத்துக்கான பாட அலகுகள்

| பாடக் குறியீடு | பாடத்தலைப்பு | குறிப்பு |
|---|---|---|
| ELC 11012 | Elementary English I (F) | இம்மூன்று அடிப்படைப் பாடங்களும் அத்தியாவசிமாகும் |
| ICT 11012 | Information Technology I (F) | |
| PSH 11012 | Peace and Social Harmony I (F) | |
| PHM 11013 | Problems of Philosophy | இப்பிரதான பாடங்களுள் ஏதாவது மூன்றைத் தெரிவு செய்தல் வேண்டும் |
| ECM 11013 | Introductory Micro Economics | |
| ENM 11013 | Introduction to Literature and Literary Appreciation | |
| GEM 11013 | Fundamental of Physical Geography | |
| PSM 11013 | Introduction to Politics - I Political Ideas | |
| SOM 11013 | Introduction to Sociology and Social Anthropology | |
| TMM 11013 | Introduction to Tamil Literature and Literary Appreciation | |

   வர்த்தகமாணி பட்டத்துக்கான பாட அலகுகள்

| பாடக் குறியீடு | பாடத்தலைப்பு | குறிப்பு |
|---|---|---|
| BCOM 11012 | Computer Application - I | அனைத்து பாடங்களும் அத்தியாவசிமாகும் |
| BCOM 11022 | English for Business - I | |
| BCOM 11032 | Business Mathematics | |
| BCOM 11043 | Tourism and Hospitality Management | |
| BCOM 11053 | Principles of Management | |
| BCOM 11062 | Financial Accounting | |

ே
தாற்றவிருக்கின்ற பாடத்தின் அல்லது பாடங்களின் குறியீட்டுடன் பாடத்தலைப்பையும் குறிப்பிடவும். கருத்தரங்குக்கு அல்லது பரீட்சைக்கு தோற்றுவதை (√) எனும் அடையாளத்தை இடுவதன் மூலம் உறுதிப்படுத்தவும்.

5. கட்டணங்கள்: கட்டணங்களைச் செலுத்தி உரிய விபரங்களைக் குறிப்பிடவும்

- கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு ரூபா. 7,500.00 உம் வணிகமாணிக்கு ரூபா. 17,500.00 உம் செலுத்தப்பட வேண்டும். இதுவரை எதுவித பரீட்சைக்கும் விண்ணப்பிக்காதவர்கள் முழுக்கட்டணத்தையும் செலுத்த வேண்டும். முதலாம் வருட முதலாம் பருவ கற்கைநெறிக் கையேடு, கருத்தரங்கு, பரீட்சை போன்றவற்றுக்கான சகல கட்டணங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.
- முதலாம் வருட முதலாம் பருவ கருத்தரங்கு மற்றும் பரீட்சையில் கலந்து கொண்டு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பரீட்சையில் அல்லது கருத்தரங்கின் பின்னர் நடைபெறுகின்ற மதிப்பீட்டுப் பரீட்சையில் சித்தியடையவில்லையெனின், அக்குறிப்பிட்ட பரீட்சைக்கு அல்லது கருத்தரங்குக்கு மாத்திரம் உரிய கட்டணத்தைச் செலுத்தி அடையாளமிடவும் (✓).
- கட்டணங்கள் யாவும் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற உறுதிச்சீட்டு (PIV) மூலமே எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் செலுத்தப் படவேண்டும். வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட PIV University Copy ஐ பரீட்சை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதபடி ஒட்டவும். வங்கிப் பற்றுச் சீட்டினை தங்களுடன் வைத்திருக்கவும்.

வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்த பின்பு உரிய இடத்தில் கையொப்பமிடவும்.

## (B) வேறு அறிவுறுத்தல்கள்

1. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் அல்லது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் மூலமே விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

   - குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு (PIV University Copy)
   - சுயவிலாசமிடப்பட்ட ரூபா 45.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9''x4'' அளவிலான இரண்டு தபாலுறைகள். அவற்றின் இடது பக்க மேல் மூலையில் பதிவு இலக்கமும் பரீட்சையின் பெயரும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தோற்றும் பரீட்சையின் பெயரையும் வெளிவாரி அபேட்சக பதிவு இலகத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

4. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு எதிர்வரும் **25.09.2018ஆம்** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம்.:

   Assistant Registrar,
   Centre for External Degrees & Professional Learning (CEDPL),
   South Eastern University of Sri Lanka,
   Oluvil # 32360

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மாறாக அல்லது குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யப்படாத அல்லது தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. பரீட்சை அனுமதி அட்டைகள் மற்றும் கருத்தரங்கு சம்பந்தமான அறிவுறுத்தல்களும் பரீட்சார்த்திகளுக்கு உரிய நேரத்தில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 067-2052801
இணையத்தள முகவரி : www.seu.ac.lk

உதவிப் பதிவாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
14.09.2018